**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதளமுகவரி: www/tnlbo.tn.gov.in

**முன்னிலை: மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.128/மா/2024**

**நாள்: 09.10.2024**

திரு. மு. ரவிசங்கர்,
சென்னை – 28. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை, மந்தவெளிப்பாக்கம், பாரதிநகர், கதவு எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மு.ரவிசங்கர் என்பவரின் 28.12.2023 நாளிட்ட மனு 28.12.2023 அன்று இம்முறைமன்றத்தில் பெறப்பட்டு, 128/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, மந்தவெளிப்பாக்கம், பாரதிநகர், கதவு எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மு.ரவிசங்கர் என்பவர் தனது 28.12.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

மனுதாரர் ஆகிய நான் அட்வகேட் டாக் பத்திரிக்கை ஆசிரியராகவும், சென்னை மாவட்ட மயிலாப்பூர் ஆர்.டி.ஐ ஆர்வலராகவும் பணியாற்றி வருகிறேன். பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை, மண்டலம் 9, வார்டு 124, பகுதி 25இல் அமைந்திருக்கும் பழமையான மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் கோவிலுக்கு தினந்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர். விசேஷ நாட்களில் பக்தர் கூட்டம் அலைமோதுவதும் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்வதும் வழக்கமாக உள்ளது. மயிலாப்பூர் சன்னதி சாலையில் இருந்து கோவிலுக்கு செல்லும் பிரதான சாலையில் 20 அடி அகலம் கொண்ட

பிச்சிப்பிள்ளை தெரு உள்ளது. கோவிலின் வாசல் இருபுறமும் கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்களின் வாகனங்களை சாலையோரம் நிறுத்துவதால் பிச்சிப்பிள்ளை தெரு குறுகி விடுகிறது. பக்தர்கள் நிம்மதியாக கோவிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்ய முடியாத அளவிற்கு நடைபாதைகளை அங்குள்ள கடைக்காரர்கள் முழுமையாக ஆக்கிரமித்து உள்ளனர் எனவும், கடைகளை நிரந்தரமாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கோவில் வாசலில் உள்ள தற்போது ஆளுமையில் உள்ள அரசியல் பிரமுகர்களின் கடைகள் இருப்பதால் கண்துடைப்புக்காக மட்டுமே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதாகவும், அதனால் மாநகராட்சி அதிகாரிகளால் முழுமையாக அகற்ற முடிவதில்லை எனவும் இதனால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் கடுமையான சிரமத்திற்கு ஆளாகிறார்கள் என்றும் எனவே சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அவர்கள் இதன் மீது நடவடிக்கை எடுத்து உடனடியாக பக்தர்கள் இலகுவாக கோவிலுக்கு சென்று வர கோவில் வாசலில் உள்ள கடைகளை அப்புறப்படுத்தும்படி பொது நலன் கருதி வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனு தொடர்பாக அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 04.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, செயற்பொறியாளர், மண்டலம் 9ன், மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.09.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) <u>மனுதாரர் 24.09.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.</u>

"பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை, மண்டலம் 9 வார்டு 124, பகுதி 25 எல்லைக்குட்பட்ட புகழ்பெற்ற பழமையான மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் கோவிலுக்கு தினம்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர். விசேஷ நாட்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுவதும், நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்வதும் வாடிக்கையாக உள்ளது. மயிலாப்பூர் சன்னதி சாலையில் இருந்து கோவிலுக்கு செல்லும் பிரதான சாலையாக 10 அடி அகலம் கொண்ட பிச்சிப்பிள்ளை தெரு உள்ளது. கோவிலின் வாசல்கள் இருபுறமும் உள்ள கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்களின் வாகனங்களை சாலையோரம் நிறுத்துவதால் பிச்சிப்பிள்ளை தெரு குறுகி விடுகிறது. இதன் காரணமாக பக்தர்கள் நிம்மதியாக கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்ய முடியாத அளவிற்கு நடைபாதைகளை அங்குள்ள கடைகாரர்கள் முழுமையாக ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த ஆக்கிரமிப்பு கடைகளை நிரந்தரமாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்குள்ள பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கோவில் வாசலில் தற்போது ஆளுமையில் உள்ள அரசியல் பிரமுகர்கள் கடைகள் வைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர். அதனால் மாநகராட்சி அதிகாரிகள் கண்துடைப்புக்காக மட்டுமே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதும், அலட்சியப்போக்காகவும் செயல்படுகின்றனர். இதனால், கோவிலுக்கு வரும் பக்தர்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் தொடர்ச்சியாக உள்ள ஆக்கிரமிப்பு பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்து கோரிக்கை எழுந்துள்ளது.

சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் இது குறித்து நடவடிக்கை எடுத்து மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் கோவிலுக்கு பக்தர்கள் இலகுவாக

செல்லும் வகையில் கோவில் வாசலில் உள்ள கடைகளை அப்புறப்படுத்தும்படி பொதுநலன் கருதி வேண்டுகிறேன்."

5) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9 இன் உதவிப்பொறியாளர் அவர்கள் <u>24.09.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார்.</u>

"மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள கோரிக்கையான மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலின் இரண்டு வாசல்களில் உள்ள கடை ஆக்கிரமிப்புகளை அகற்ற (Vending Committee) தெருவோர கடைகள் அமைப்பு மூலமாக கடைகள் கணக்கிடப்பட்டு அவர்களுக்கு உரிய உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டுள்ளது. தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி (Vending Committee) தெருவோர கடைகள் அமைப்பு மூலம் கணக்கீடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணக்கீடு முடிந்த பின்பு அடையாள அட்டை இல்லாத கடைகள் அகற்றப்படும். இப்பணி இரண்டு மாத காலத்திற்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது."

6) மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9 இன் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனைக்கு பின்பு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறிப்பட்டன.

மனுதாரர் தன்னுடைய மனுவில் பெருநகர சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலம் 9, வார்டு 124, பகுதி 25இல் அமைந்துள்ள மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் கோவிலுக்கு தினந்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகின்றனர் என்றும், இக்கோவிலுக்கு செல்லும் பிரதான சாலை 20 அடி அகலம் கொண்ட பிச்சிப்பிள்ளை தெருவின் ஓரம் பக்தர்கள் வாகனங்கள் நிறுத்துவதால் சாலை குறுகி விடுவதாகவும், மேலும் பக்தர்கள் நிம்மதியாக சென்று சுவாமி தரிசனம் செய்ய முடியாத அளவிற்கு கடைகள் அமைத்து கடைக்காரர்கள் ஆக்கிரமித்துள்ளதாகவும், இது குறித்து மண்டலம் 9 இன் அலுவலருக்கு புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்ற மண்டலம் 9ன் அலுவலர்களுக்கு உத்திரவிடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மைலாப்பூர் கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் கோவிலின் இரண்டு வாசல்களில் உள்ள கடை ஆக்கிரமிப்புகளை அகற்ற (Vending Committee) தெருவோர கடைகள் அமைப்பு மூலமாக கடைகள் கணக்கீடப்பட்டு அவர்களுக்கு உரிய உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் தெருவோர கடைகள் அமைப்பு மூலம் கடைகள் கணக்கிடப்பட்டு வருவதாகவும், கணக்கீடு முடிந்த பின்பு அடையாள அட்டை இல்லாத கடைகள் அகற்றப்படும் என்றும் இப்பணிகள் இரண்டு மாத கால அவகாசத்தில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9இன் உதவிப்பொறியாளர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மைலாப்பூர் கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் கோவில் தெருக்களில் ஆக்கிரமித்துள்ள கடைகளை தெருவோர கடைகள் அமைப்பு (Vending Committee) மூலம் கணக்கீடு செய்யப்பட்டு, கணக்கீடு முடிந்த பின்பு அடையாள அட்டை இல்லாத கடைகள் அகற்றப்படும் என்றும் இப்பணி இரண்டு மாத கால அவகாசத்தில் முடிக்கப்படும் என்று மண்டலம் 9ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு மேற்கண்ட பணியினை 2 மாதங்களுக்குள் முடித்திடவும், The Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and regulation of Street Vendors) Scheme and

Rules 2015இல் குறிப்பிட்டுள்ள விதிகள் 5, 7 மற்றும் 13 ஐ பின்பற்றி சாலையோர கடைகள் பொது மக்களுக்கு இடையூறாக இல்லாவண்ணம் முறைபடுத்துமாறும், சாலையோரங்களில் ஆக்கிரமிப்புகளின்றி உள்ளதை உறுதி செய்யுமாறும், நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்புமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9 இன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.மு.ரவிசங்கர்
எண்.23, பாரதிநகர்
மந்தவெளிப்பாக்கம்,
சென்னை–600 028.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
எண்.4, 4வது குறுக்குத் தெரு,
லேக் வியூ ரோடு, நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

14/10/24

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

14/10/24

3/10